# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச்சபைச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, செத்தெம்பர் மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 22.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

## **2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டம்**

[2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ- 60/98

**ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

## பாகம் I

### **ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையைத் தாபித்தல்**

**2.** (1) ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபை என அழைக்கப்பட வேண்டியதான சபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும் (அது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையானது இலங்கைக்கான தேசிய தராதர அங்கீகார அதிகாரசபையாக இருத்தல் வேண்டும்.

ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையைத் தாபித்தல்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையையும், பொது இலச்சினையையும் கொண்டதாதலும் வேண்டும்; அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**3.** சபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

சபையின் பணிகள்.

(அ) ஆய்வுகூடங்கள், சான்றளிப்பு மற்றும் சோதனைக் குழுமங்கள், பயிற்சி நிறுவனங்கள் என்பனவற்றிற்கும், அத்துடன் ஒத்திசைவு மதிப்பீடுகளை நிறை

வேற்றுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறு ஆட்களுக்கும் இயைபான சர்வதேச நியமங்களின் அடிப்படையில் தேசிய நியமங்களுக்கு இணங்க தராதர அங்கீகாரத்தை அளித்தல் ;

(ஆ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான தேசிய தராதரக் கொள்கையில் முற்போடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கிணங்க, தராதர அங்கீகரிப்புச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(இ) சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதர அங்கீகரிப்புச் செயன்முறைகளின் தகுதியை உறுதிப்படுத்தலும், அத்துடன் தராதர அங்கீகரிப்பில் சர்வதேச ஒத்துழைப்பிற்கு வசதியளித்தலும் ;

(ஈ) தராதர அங்கீகரிப்பின் உபயோகத்தை ஊக்குவித்தலும் முன்னேற்றுதலும், தராதர அங்கீகரிப்பின்மீது மதிப்பீட்டாளருக்குப் பயிற்சியளித்தல், கருத்தரங்குகளை நடாத்துதல், அத்துடன் தராதர அங்கீகரிப்பின் மீதான தகவல்களைப் பரப்புதல் என்பனவும் ;

(உ) வெளிநாட்டு, சர்வதேச குழுக்களுடன் ஒத்திசைவு தொடர்பிலான அல்லது அதனுடன் தொடர்புபட்ட துறைகள் தொடர்பில் பரஸ்பர அங்கீகாரத்தின் மீது உடன்படிக்கைகளை நிறைவேற்றுதல்; அத்துடன்

(ஊ) மேலெடுத்துக்காட்டப்பட்ட பணிகளில் ஏதேனும் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் புரிவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமான எல்லா அத்தகைய வேறு செயல்களைச் செய்தல்.

சபையின் தத்துவங்கள்.

**4.** சபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றுள் எதனையும் அல்லது அவை அனைத்தையும் பிரயோகிக்கலாம் :—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) சபையானது, அதனது பணிகளை நிறைவேற்றுவதற்கு உசிதமாகவுள்ளதெனத் தோன்றுகின்றதான எவையேனும் நம்பிக்கைப் பொறுப்புக்களை அல்லது ஏதேனும் முகவராண்மைத் தொழிலைப் பொறுப்பேற்றலும், நிறைவேற்றலும் ;

(இ) அதனது பணிகளை நிறைவேற்றுவதற்காகக் கடன்கள் பெறுதல் அல்லது திரட்டுதல், அத்துடன் அத்தகைய கடன்களைத் திரட்டும் நோக்கத்திற்காகச் சபைக்குச் சொந்தமான அத்தகைய ஆதனத்தை அது அவசியமாகக் கருதப்படுகின்றவாறாக ஈடு அல்லது சாட்டுஈடு என்ற வகையில் முனைவு செய்தல் ;

(ஈ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாகத் தேவைப்படுத்தப்படாத அதனது ஏதேனும் பணத்தைச் சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(உ) சபையினால் அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களை அறவிடுதல் ;

(ஊ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்தல் ; அத்துடன்

(எ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது இடைநேர்விளைவான அல்லது உசிதமான அத்தகைய வேறு எல்லா விடயங்களையும் செய்தல்.

**5.** (1) சபையானது, அமைச்சரால் நியமிக்கப்படும் பதின்மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளதொரு ஆளும் பேரவையைக் கொண்டிருத்தல் வேண்டும் (அது இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்). இவர்களுள் — ஆளும் பேரவை.

(அ) மூன்று உறுப்பினர்கள், இவர்கள் அறிவியல், தொழி நுட்பம், கல்வி, கைத்தொழில் அல்லது நிர்வாகத் துறைகளில் அல்லது வேறேதாவது தொடர்புபட்ட துறைகளில் சிறப்புத் தகைமைகளைக் கொண்ட ஆட்களிடையேயிருந்து நியமிக்கப்பட்டவர்களாதல் வேண்டும் ;

(ஆ) ஓர் உறுப்பினர்,இவர் 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் நிறுவக சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டளைகள் நிறுவகத்தின் தவிசாளரால் பிரதிநிதியாக இருப்பதற்காகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராதல் வேண்டும் ;

(இ) ஓர் உறுப்பினர், அறிவியல், தொழில்நுட்பவியல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினதும் அத்துடன் அத்தகைய அமைச்சிற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள திணைக்களங்களினதும், நியதிச் சட்டக் குழுக்களினதும் பிரதிநிதியாக அமைச் சருடனான கலந்தாலோசனையுடன், நியமிக்கப்பட்டவ ராதல் வேண்டும் ;

(ஈ) ஓர் உறுப்பினர், இவர் பொதுத் திறைசேரியின் பிரதி நிதியாக நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் நியமிக்கப் பட்டவராதல் வேண்டும் ;

(உ) ஓர் உறுப்பினர் ; இவர் வியாபாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச் சினதும், அத்து டன் அத்தகைய அமைச்சிற்குக் குறித் தொதுக்கப்பட்டுள்ள திணைக்களங்களினதும், நியதிச் சட்டக் குழுக்களினதும் பிரதிநிதி அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், நியமிக்கப்பட்டவராதல் வேண்டும் ;

(ஊ) ஓர் உறுப்பினர், கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சி னதும், அத்துடன் அத்தகைய அமைச்சிற்குக் குறித் தொதுக்கப்பட்டுள்ள திணைக்களங்களதும், நியதிச் சட்டக்குழுக்களினதும் பிரதிநிதியாதலும் அமைச்சருட னான கலந்தாலோசனையுடன், நியமிக்கப்படுபவரு மாதல் வேண்டும் ;

(எ) ஓர் உறுப்பினர், இவர் சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினதும், அத்தகைய அமைச்சிற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள திணைக்களங்களினதும், நியதிச் சட்டக்குழுக்களினதும் பிரதிநிதியாதலும் அமைச்சருடனான கலந்தாலோசனை யுடன், நியமிக்கப்பட்டவராதலும்வேண்டும்;

(ஏ) ஓர் உறுப்பினர், இவர் அளவீட்டு அலகுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பிரதிநிதியாதலும் அத்திணைக்களம் எந்த அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் நியமிக்கப்பட்டவராதல் வேண்டும் ;

(ஐ) ஓர் உறுப்பினர், இவர் கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினதும் அத்துடன் அத்தகைய அமைச்சிற்குக் குறித்தொதுக்கப்பட்ட திணைக்களங்களினதும் நியதிச் சட்டக் குழுக்களினதும் பிரதிநிதியாதலும் அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் நியமிக்கப்பட்டவருமாதலும் வேண்டும் ;

(ஒ) ஓர் உறுப்பினர், இவர் இலங்கை தேசிய விஞ்ஞான கல்விக் கழகத்தினால் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பேர்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஓ) ஓர் உறுப்பினர், இவர் வர்த்தக, கைத்தொழில் மன்றங்களின் சம்மேளனத்தினால் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பேர்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து அமைச்சரினால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) பேரவையின் உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப் பகுதிக்கு அவருடைய பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராயிருக்கின்றவிடத்து, அமைச்சரானவர், தவிசாளரின் விதப்புரையின் மீதும், அத்துடன் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திக்கொண்டும் அவருக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(3) சபையின் தத்துவங்களின் பிரயோகம், மற்றும் சபையின் விவகாரங்களின் பொதுக் கண்காணிப்பு, பணிப்புக்கள் முகாமைத்துவம் என்பன பேரவையிடம் உரித்தாதல் வேண்டும்.

பேரவையின் தவிசாளரும் துணைத் தவிசாளரும்.

**6.** (1) அமைச்சரானவர், பேரவையின் உறுப்பினர்களுள் ஒருவரை பேரவையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரின் பணிகளாதல் பேரவையின் செயற்பாடுகளில் வழிகாட்டலும், பேரவையில் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர், பேரவையின் உறுப்பினர்களுள் ஒருவரை பேரவையின் துணைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும். துணைத் தவிசாளர், தவிசாளர் சமுகமாயிராத அல்லது தவிசாளர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற போதெல்லாம் தவிசாளரின் கடமைகளைப் புரிதல் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனம்.

**7.** ஆளொருவர், —

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, மாகாண சபை உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராக இருந்தால் ;

(ஆ) சபையினால் செய்யப்பட்ட அல்லது சபையின் சார்பில் செய்யப்பட்ட எவையேனும் ஒப்பந்தங்களின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நலனை, அவர் மூலமாகவோ அல்லது அவர் சார்பில் வேறு ஆள் மூலமாகவோ நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தால் ;

(இ) இலங்கையிலோ அல்லது வேறு ஏதேனும் நாட்டிலோ வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஈ) இலங்கையிலோ அல்லது வேறு ஏதேனும் நாட்டிலோ வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவரென அல்லது வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுக்கப்படாத கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கிமுறிந்த ஓர் ஆளாக இருந்தால் ; அல்லது

(உ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒருவராக இருந்தால்,

பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகவீனமுடையவராதல் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர்களின் பதவிக் காலம் முதலியன.

**8.** (1) பேரவையின் உறுப்பினர் ஒருவர் அதன் சார்பில் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து பதவி விலகலாம்.

(2) அமைச்சரானவர் பேரவையின் எவரேனும் உறுப்பினரை காட்டப்படும் காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக மூன்று ஆண்டுகளாதல் வேண்டும் :

ஆயினும், இறந்த அல்லது பதவிவிலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு நியமிக்கப்படும் பேரவையின் உறுப்பினர் ஒருவர், அவர் எந்த உறுப்பினரைப் பின்னுருகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) பேரவையின் தவிசாளரும், துணைத் தவிசாளரும் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் முறையே தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் பதவிகளிலிருந்து பதவி விலகலாம் என்பதுடன், அப்பதவி விலகலானது அத்தகைய கடிதம் அமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(5) அமைச்சரானவர், பேரவையின் தவிசாளரையும், துணைத் தவிசாளரையும் காட்டப்படும் காரணங்களுக்காக முறையே தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் பதவிகளிலிருந்து அகற்றலாம்.

(6) பேரவையின் தவிசாளரினதும், துணைத் தவிசாளரினதும் பதவிக் காலமானது முறையே (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய பேரவைகளின் உறுப்பாண்மைக் காலமாதல் வேண்டும்.

மீள் நியமனத்திற் கான தகுதி.

**9.** காலம் கழிவதன் மூலம் பதவியை வறிதாக்கும் பேரவை உறுப்பினர் ஒருவர் மீள் நியமனத்திற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியம்.

**10.** எல்லா உறுப்பினர்களுக்கும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் பேரவையின் நிதியத்திலிருந்து ஊதியம் செலுத்தப்படலாம்.

பேரவையின் கூட்டங்கள்.

**11.** (1) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கு ஐந்து உறுப்பினர்கள் கூட்ட நடப்பெண்ணொன்றாக அமைதல் வேண்டும்.

(2) ஆகக் குறைந்தது பேரவையின் ஐந்து உறுப்பினர்களாவது இலங்கையில் சமுகமாயிருந்தால் ஏதேனும் வினா, இலங்கையில் சமூகமாகவிருக்கும் உறுப்பினர்களுக்கு இயைபான பத்திரங்களை அனுப்பிவைப்பதன் மூலமும் அத்துடன் அத்தகைய வினாவின் மீது அவர்களது கருத்துக்களை எழுத்தில் அத்தகைய உறுப்பினர்கள் பதிவதின் மூலமும், அவர்கள் மற்ற ஒவ்வொருவரதும் சமூகத்தில் அவ்விடயம் மீதான தமது வாக்குகளைப் பதிவு செய்வதன் மூலமும் முடிவு செய்யப்படலாம். அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் அத்தகைய வினா, கருத்துக் கள் மற்றும் வாக்குகள் பற்றிய அறிக்கையொன்று பேரவையின் கூட்டு அறிக்கைப் புத்தகத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். அத்தகைய வாக்குகள் சரிசமமாக இருந்தால், அத்தகைய வினாவானது முடிவுசெய்யப்படுவதற்காக பேரவையின் கூட்டமொன்றுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய பேரவையானது அதனது கூட்டங்கள், மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களின் நிறைவேற்றுதல் என்பன தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) பேரவையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கைகள் எதுவும் அதனது உறுப்பினர்களிடையே வெற்றிடமொன் றுள்ளது என்ற அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுள்ளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

இலச்சினை.

**12.** (1) பேரவையின் இலச்சினை (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சாதனம் ஒன்றல்லாத வேறு ஏதேனும் சாதனத்தில் பின்வருவோர் முன்னிலையில் பொறிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவர்களால் சான்றுறுதிப்படுத்தப்படலும் வேண்டும் :—

(அ) பேரவையின் தவிசாளரும், பணிப்பாளரும் ; அல்லது

(ஆ) சபையின் தவிசாளர், அல்லது பணிப்பாளர் மற்றும் சபையின் வேறு எவரேனும் உறுப்பினர் ; அல்லது

(இ) பணிப்பாளரும் பேரவையினால் அதன் சார்பில் செயற்படுவதற்கென விசேடமாக அதிகாரமளிக்கப் பட்ட பேரவையின் அத்தகைய அலுவலரும் அல்லது சேவையாளரும்.

(2) பேரவையினால் புரியப்படும் ஏதேனும் சேவைக்கான உடன்படிக்கையைக் கொண்டுள்ள சாதனமொன்றுக்கு சபையின் இலச்சினையைப் பொறித்தலானது, பணிப்பாளர் அல்லது அவர் சமூகமளிக்காத போது அதன் சார்பில் செயற்படுவதற்கெனச் சபையினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் முன்னிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர்களால் சான்றுறுதிப் படுத்தப்படலும் வேண்டும்.

பேரவையின் தத்துவங் களையும் கடமைகளையும் கையளித்தல்.

**13.** (1) பேரவையானது அதன் தத்துவங்கள் மற்றும் கடமைகள் எவற்றையும் பணிப்பாளருக்கு, பேரவையின் உறுப்பினர் ஒருவருக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் நியமிக்கபட்பட்ட ஏதேனும் குழுவுக்கு அல்லது சபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு கையளிக்கலாம்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் பேரவையின் எவையேனும் தத்துவங்களும், கடமைகளும் எந்தப் பணிப்பாளருக்கு, உறுப்பினருக்கு அல்லது பேரவையின் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது குழுவுக்குக் கையளிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தப் பணிப்பாளர், சபையின் அல்லது குழுவின் உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது சேவையாளர் அவ்வாறு கையளிக்கப் பட்ட தத்துவங்களையும், கடமைகளையும் பேரவையின் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புரைகளுக்கமைய பிரயோகித்தலும், புரிதலும் வேண்டும்.

குழுக்களின் நியமனம்.

**14.** (1) பேரவையானது அதன் கடமைகளையும் புரிவதில் அதற்கு உதவுவதற்காக அத்தகைய ஏதேனும் குழுவில் உறுப்பினர்களாக இருப்பதற்கு அவசியமானவர்களென அது கருதும் அத்தகைய ஆட்களை (சபையினது அலுவலர்களாக அல்லது சேவையாளர்களாக இருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) நியமிக்கலாம்.

(2) பேரவையானது அதன் தத்துவங்களுள் பொருத்தமானவையெனக் கருதுகின்றவாறான அத்தகையவற்றை அவ்வாறு நியமிக்கப்பட்ட குழு ஒன்றிற்குக் குறித்தொதுக்கலாம். ஆனால், அத்தகைய குறித்தொதுக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம். அத்தகைய ஏதேனும் குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிவு பேரவையால் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) அத்தகைய ஒவ்வொரு குழுவினதும் உறுப்பினர்களுக்கும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியமும், படிகளும் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

## பாகம் II

### தராதர அங்கீகாரம்

தராதர அங்கீகாரம் முதலிய வற்றுக்கான கட்டளைக்கல் முதலியவற்றைத் தீர்மானித்தல்.

**15.** அமைச்சரானவர் ஆய்வுகூடங்கள், சான்றளிப்பு அத்துடன் சோதனைக் குழுக்கள், பயிற்சி நிறுவனங்கள் என்பவற்றினதும், ஒத்திசைவு மதிப்பீடுகளை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்தப்பட்ட வேறு ஆட்களினதும் தராதர அங்கீகாரத்திற்கான கட்டளைக்கற்கள் மற்றும் தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

தராதர அங்கீகாரத் திற்கான விண்ணப்பம் விதித்துரைக் கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

**16.** விடயத்திற்கேற்ப, ஆய்வுகூடமொன்றின் அல்லது சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழுவொன்றின் அல்லது பயிற்சி நிறுவனத்தின் நிருவாக அலுவலர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது ஒத்திசைவு மதிப்பீடுகளை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் , அது சார்பில் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான முறையிலும் படிவத்திலும், இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படும் சோதனைகளை அல்லது வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தராதர அங்கீகரிப்புக்காக சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

தராதர அங்கீகாரத் திற்கான அனுமதி.

**17.** சபையானது, தராதர அங்கீகாரத்தை வேண்டுகின்ற ஆய்வுகூடமொன்றினால், சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழுவொன்றினால் அல்லது பயிற்சி நிறுவனத்தினால் அல்லது ஆளினால் 16 ஆம் பிரிவின்கீழ் அதற்கு அனுப்பப்பட்ட விண்ணப் பத்தை கருத்திற்கெடுத்த பின்னரும், அது அவசியமெனக் கருதக் கூடியவாறான அத்தகைய பரிசோதனைகளினதும், மதிப்பீடுகளி னதும் மேல், அத்துடன் விண்ணப்பதாரி 15 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படும் தராதர அங்கீகாரத்திற்கான கட்டளைக்கற் களையும் தேவைப்பாடுகளையும் திருப்திப்படுத்துகின்றாரென 14 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தோதான குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர், திருப்திப்படுமிடத்து, சபையா னது விடயத்திற்கேற்ப அத்தகைய ஆய்வுகூடத்திற்கு, சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழுவுக்கு, பயிற்சி நிறுவனத்திற்கு அல்லது ஆளுக்கு தராதர அங்கீகாரத்தை அளித்தல் வேண்டும்.

சான்றுப் பத்திரமும் தராதர அங்கீகார சின்னத்தைப் பயன் படுத்துதலும்.

**18.** (1) சபையானது 17 ஆம் பிரிவின்கீழ் ஆய்வுகூடமொன்றுக்கு சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழுவுக்கு அல்லது பயிற்சி நிறுவனத்துக்கு அல்லது ஒத்திசைவு மதிப்பீடுகளை நிறை வேற்றுமாறு தேவைப்படுத்தப்பட்ட வேறு ஆளுக்கு தராதர அங்கீ காரம் அளிக்கின்றவிடத்து, அது பணிப்பாளரால் அத்தகைய ஆய்வுகூடம், சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழு பயிற்சி நிறுவகம் அல்லது ஆள் எந்தச் சோதனைகளை வேறு செயற் பாடுகளை நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கும் அத்துடன் அத்தகைய ஆய்வுகூடம், சான்றளிப்பு பரிசோதனைக் குழு, பயிற்சி நிறுவனம் அல்லது ஆள் இதனகத்துப்பின்னர் வெளிப்படுத்தப் படும் முறையில் விதித்துரைக்கப்படும் தராதர அங்கீகாரச் சின்னத்தை உபயோகிக்க அனுமதிக்கவும் தராதர அங்கீகாரம் அளிக்கப்படுகின்றதோ அந்தச் சோதனைகளை அல்லது செயற் பாடுகளைக் குறித்துரைத்து, பணிப்பாளரால் கையொப்பமிடப் பட்ட சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழானது,

(அ) ஆய்வுகூடத்தில் ; அல்லது

(ஆ) அத்தகைய சான்றிதழ் எந்நிறுவனத்திற்கு அல்லது எவ்வாளுக்கு வழங்கப்பட்டிருக்கிறதோ, விடயத்திற் கேற்ப அத்தகைய சான்றளிப்பு அல்லது சோதனைக் குழுவின் பயிற்சி நிறுவனத்தில் அல்லது ஆளின் பதிவு செய்யப்பட்ட தொழிலிடத்தில்,

துலாம்பாரமாக வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(3) (அ) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 36 ஆம் இலக்கப் புலமைச் சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 17 ஆம் பிரிவின்கீழ் தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட ஓர் ஆய்வுகூடம் சான்றளிப்பு அல்லது பரிசோதனைக்குழு, பயிற்சி நிறுவனம் அல்லது ஆள் தவிர்ந்த வேறு ஆள் எவரும் விதித்துரைக்கப்பட்ட தராதர அங்கீகாரச் சின்னத்தைப் பயன்படுத்தலாகாது.

(ஆ) ஓர் ஆய்வுகூடம், சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழு, பயிற்சி நிறுவனம் அல்லது ஆள் 17 ஆம் பிரிவின்கீழ் அதற்கு அல்லது அவருக்கு அளிக்கப்பட்ட தராதர அங்கீகாரம் வலுவிலிருக்கும் வரை மட்டும், அத்துடன் அது அவர் எந்தச் சோதனைகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு இப்பிரிவின் கீழ் தராதர மளிக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சோதனைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் மட்டும் விதந்துரைக்கப்பட்ட தராதர அங்கீகாரச் சின்னத்தைப் பயன்படுத்தலாம்.

அந்தஸ்து முதலியவற்றில் மாற்றங்கள் பற்றி சபைக்கு அறிவிக்கும் கடமை.

**19.** பதினேழாம் பிரிவின்கீழ் தராதர அங்கீகாரம் அளிக்கப் பெற்ற :—

(அ) ஆய்வுகூடமொன்று ;

(ஆ) ஒரு சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழுவின், பயிற்சி நிறுவனத்தின் அல்லது வேறு ஆளின்,

அந்தஸ்தில் அல்லது தொழிற்பாடுகளில் எவையேனும் மாற்றங்கள் பற்றி உடனடியாக சபைக்கு அறிவிப்பது அதனது அல்லது அவரது கடமையாதல் வேண்டும்.

தராதர அங்கீகாரத்தை இடை நிறுத்தலும் இல்லா தொழித்தலும்.

**20.** (1) சபையானது :—

(அ) பதினேழாம் பிரிவின்கீழ் தராதர அங்கீகாரம் அளிக் கப்பெற்ற ஏதேனும் ஆய்வுகூடம், சான்றளிப்பு அல் லது பரிசோதனைக்குழு, பயிற்சி நிறுவனம் அல்லது ஆள் தராதர அங்கீகாரத்திற்காக 15 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களையும், தேவைப் பாடுகளையும் திருப்திப்படுத்தவில்லை என்று; அல்லது

(ஆ) விடயத்திற்கேற்ப அத்தகைய ஆய்வுகூடம் சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழு, பயிற்சி நிறுவனம் அல்லது ஆளொருவர் தொடர்பில் தராதர அங்கீகாரத்திற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் அல்லது அத்தகைய விண்ணப்பம் தொடர்பில் சமர்ப் பிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஆவணத்தில் பொய்யான கூற்று ஏதேனும் உள்ளது அல்லது அதிலிருந்து ஏதே னும் முக்கியமான விவரம் விட்டுவிடப்பட்டுள்ளது.

என்று திருப்திப்படுமிடத்து, சபையானது விடயத்திற்கேற்ப அத்தகைய ஆய்வுகூடத்திற்கு, சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழுவுக்கு, பயிற்சி நிறுவனத்திற்கு அல்லது ஆளிற்கு அளிக்கப்பட்ட தராதர அங்கீகாரத்தை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம் என்பதுடன் விடயத்திற்கேற்ப அத்தகைய ஆய்வுகூடத்திற்கு சான்றளிப்பு அல்லது பரிசோதனைக் குழுவுக்கு, பயிற்சி நிறுவனத்திற்கு அல்லது ஆளுக்கு உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட இடைநிறுத்த அல்லது இல்லாதொழித்தற் கட்டளையினால் இடருற்ற ஆளொரு வர் அதிலிருந்து விதித்துரைக்கப்பட்ட முறையிலும் விதித்து ரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பேரவைக்கு மேன்முறையீடு செய்யலாம். ஏதேனும் அத்தகைய மேன்முறையீட்டின் மீதான பேரவையின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

*சபை இடாப்பை பேணுதல்.*

**21.** சபையானது 17 ஆம் பிரிவின் கீழ் தராதர அங்கீகாரம் அளிக்கப்பெற்ற ஆய்வுகூடங்களினதும், சான்றளிப்பு மற்றும் பரிசோதனைக் குழுக்களினதும், பயிற்சி நிறுவனங்களினதும் அத்துடன் ஆட்களினதும், அத்துடன் எந்தச் சோதனைகளையும், செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு அத்தகைய ஆய்வுகூடங் களுக்கும், சான்றளிப்பு மற்றும் பரிசோதனைக் குழுக்களுக்கும், பயிற்சி நிறுவனங்களுக்கும், ஆட்களுக்கும் தராதர அங்கீகாரம் வழங்கப்படுகின்றதோ, அந்தச் சோதனைகளினதும், செயற் பாடுகளின் நோக்கெல்லையினதும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் III

### சபையின் பணியாட்டொகுதி

சபையின் பணிப்பாளர்.

**22.** (1) அமைச்சரானவர் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் அறிவியல் அத்துடன் தொழில்நுட்பத் துறையில் பொருத்தமான ளவு தகைமைபெற்ற ஆள் ஒருவரைச் சபையின் பணிப்பாளராக இருப்பதற்கு என நியமித்தல் வேண்டும் (இச்சட்டத்தில் இவர் "பணிப்பாளர்" என்று குறிப்பீடுசெய்யப்படுவார்).

(2) பணிப்பாளரது தொழிலின் நியதி, நிபந்தனைகள் அமைச்சரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளரின் ஊதியம், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(4) பணிப்பாளர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவருடைய பதவிக்கான கடமைகளைப் புரிய இயலாதிருக்கும் போதெல்லாம், அமைச்சரானவர் அத்தகைய இல்லாமையின் போது, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(5) சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருக்க வேண்டியவரான பணிப்பாளரின் பணிகள் சபையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கிணங்க சபையின் வேலையைப் பணிப்புரைகளுக்கிணங்க ஒழுங்குபடுத்துவதும், நெறிப்படுத்துவதுமாதல் வேண்டும். மேலும், அவர் ஆளும் பேரவையின் செயலாளராகவும் பணியாற்ற வேண்டும்.

சபையின் அலுவலர்கள் மீதும், சேவையாளர்கள் மீதும் ஒழுக்காற்றுக் கடப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு சபைக்குள்ள தத்துவம்.

**23.** பேரவையின் சபையினது அலுவலர்களையும், சேவையாளர் களையும் நியமிப்பதற்கும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கடப்பாட்டை (பதவிநீக்கம் உட்பட) பிரயோகிப்பதற்கும் தத்துவமுடைய தாதல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்களைக் கையளித்தல்.

**24.** (1) சபையானது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பேரவையின் ஏனைய அலுவலர்களின் அல்லது சேவையாளர்களின் நியமனம் மற்றும் பதவிநீக்கம் தொடர்பில் அதனது தத்துவங்கள் எல்லாவற்றையும், அல்லது எவற்றையும் பணிப்பாளருக்குக் கையளிக்கலாம். இதன்கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகிக்கையில் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரினதும், அல்லது சேவையாளரினதும் ஊதியம் உட்பட தொழில் நிபந்தனைகள் பேரவையின் ஒருப்பாட்டுடன் அவரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(2) பணிப்பாளரானவர், சபையினது முன்னங்கீகாரத்துடன் தவிர, ஓர் இலங்கைப் பிரசை அல்லாத எவரேனும் ஆளை சபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக நியமித்தலாகாது.

(3) சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் சபையினது முன் அங்கீகாரத்துடனேயே பணிப்பாளரினால் பதவி நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

மதிப்பீட்டாளர்களின் நியமனம்.

**25.** (1) பணிப்பாளர் பேரவையின் அனுமதியுடன் பொருத்தமானளவு தகுதிவாய்ந்தவரான சபையின் எவரேனும் அலுவலர்களை அல்லது சேவையாளர்களை அல்லது வேறு எவரேனும் ஆட்களை இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட மதிப்பீடுகளைச் செய்யும் நோக்கத்துக்காக மதிப்பீட்டாளர்களாகப் பணியாற்றுவதற்காக மதிப்பீட்டாளர் குழுமமொன்றை நியமிக்கலாம்.

(2) பணிப்பாளர், பேரவையின் அனுமதியுடன் குறிப்பிட்ட நோக்க மொன்றுக்காக பணிபுரிவதற்காக மதிப்பீட்டாளர் குழாமிலிருந்து மதிப்பீட்டாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நடைமுறையை உருவாக்குதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மதிப்பீட்டாளருக்கும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவர் மதிப்பீட்டாளர் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார் எனப் பயனுறும் நியமனக் கடிதமொன்று சபையினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நியதிகளின்படி மதிப்பீட்டாளரொருவராக நியமிக்கப்பட்டுள்ளவருமான ஆள் ஒருவருக்கு அவரால் ஆற்றப்பட்ட கருமங்களுக்காக பேரவையின் ஒருப்பாட்டுடன் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படக்கூடியதான அத்தகைய வீதங்களில் சபையின் நிதியத்திலிருந்து ஊதியம் அல்லது படிகள் செலுத்தப்படலாம்.

## பாகம் IV

### நிதி

சபையின் நிதியம்.

**26.** (1) சபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையின் நிதியத்துக்குள் -

(அ) சபையின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இந்தச் சட்டத்தின்கீழ் சபையால் ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் சபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) இலங்கையிலாயினும்சரி, அல்லது வெளிநாட்டிலாயினும்சரி எத்தன்மையானதுமான ஏதேனும் மூலத்திலிருந்தேனும் நன்கொடைகளாக அல்லது மானியங்களாக சபையினால் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) சபையின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் விற்பனையின்மூலம் பெறப்பட்ட எவையேனும் பணத்தொகைகள் உட்பட, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், அதன் கடமைகளை புரிகையிலும் சபையினால் பெறப்படக்கூடியதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) சபையின் நிதியத்திலிருந்து -

(அ) இச்சட்டத்தின்கீழ் சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், அதன் கடமைகளைப் புரிகையிலும் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமென இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டால் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியத்துக்கு அல்லது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களின்கீழ் முறையே உதவுதொகைகளாகச் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

செலுத்தப்படல் வேண்டும்.

*சபையின் வரவு செலவுத் திட்டம்.*

**27.** பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் வரவுசெலவுத் திட்டமொன்றை தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன், அவ்வரவு செலவுத்திட்டம் எந்த நிதியாண்டு தொடர்புடையதோ அந்த நிதியாண்டின் தொடக்கத்திற்கு முன்னராக மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் சபையினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

*வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடுதல்.*

**28.** முப்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது இச்சட்டத்தின்கீழ் அதனால் வழங்கப்பட்ட எவையேனும் சேவைகள் தொடர்பில் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களை அறவிடலாம் அல்லது அத்தகைய நிதிசார் ஒழுங்குகளைச் செய்யலாம்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**29.** (1) பஞ்சாங்க ஆண்டே சபையின் நிதியாண்டாதல் வேண்டும்.

(2) பேரவையானது சபையின் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செம்மையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் ஏற்புடையனவாகும்.

(4) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் சபைக்கும் சபை தொடர்பிலும் ஏற்றமாற் றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இறுதிக் கணக்காய்வுகளையும், வருடாந்த அறிக்கைகளையும் உரியநேரத்தில் சமர்ப்பிப்பது பேரவையின் பொறுப்பாகும்.

## பாகம் V

### பொது

இரகசியம்.

**30.** பேரவையின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், சபையின் ஒவ்வோர் அலுவலரும், சேவையாளரும், அத்துடன் இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் ஒவ்வொருவரும் அவரது கடமைகளைச் செய்ய ஆரம்பிக்க முன்னர், இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகிக்கையிலும், புரிகையிலும் பின்வருவன தவிர, அவரது அறிவுக்கு எட்டக்கூடியதான ஏதேனும் விடயத்தை—

(அ) நீதிமன்றம் ஒன்றினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது ;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கி யொழுகுவதற்காக,

தவிர வெளியிடுவதில்லையென உறுதியளிக்கும் வெளிப்படுத்து கையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்.

பேரவையின் மற்றும் சபையின் உறுப்பினர்கள்.

**31.** பேரவையின் எல்லா உறுப்பினர்களும், சபையின் அலுவலர்களும், சேவையாளர்களும், அத்துடன் இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட எல்லா மதிப்பீட்டாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காகவும் அதன் கருத்திற்குள்ளும் பகிரங்க அலுவலர்களாக இருத்தல் வேண்டும் எனக் கருதப்படல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தில் கருத்திற்குள் சேவையான அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாக கருதப்படுதல் வேண்டும்.

**32.** சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்ட வணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண் டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக் கைக்கான பாதுகாப்பு.

**33.** (1) வழக்கு நடவடிக்கை அல்லது துடர்ச்சி எதுவும் -

(அ) இச்சட்டத்தின் கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது சபையால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபைக் கெதிராக ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக் காக பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு, அலு வலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது அதனது ஏதேனும் குழுவின் உறுப்பினருக்கு, அல்லது இச்சட் டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் மதிப்பீட் டாளருக்கு எதிராக

தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் சபையினால், அல்லது பேரவையி னால் அல்லது சபைக்கெதிராக அல்லது பேரவைக்கெதிராக தொடரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையின் அல்லது துடர்ச்சி யில் சபையினால் அல்லது பேரவையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, சபையின் நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய வழக்கு நடவடிக்கையில் அல் லது துடர்ச்சியில் சபைக்கு அல்லது பேரவைக்கு செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத்தொகைகள் சபையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் அல்லது பேரவையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக்கொள் ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கெதிராக கொண்டு வரப்பட்ட வழக்கு நடவடிக்கையில் அல்லது துடர்ச்சியில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் அத்தகைய வழக்கு நடவடிக்கையால் அல்லது துடர்ச்சி யில் அத்தகைய செலவுகள் அவரிடமிருந்து அறவிடப்பட்டா லொழிய, அச்செயல் நன்னோக்கத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் நிலைநாட்டினால், சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*உட்பிரவேசிக்கும் தத்துவங்கள்.*

**34.** சபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அலுவலர் ஒருவர் அல்லது இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் ஒருவர் அல்லது சபையின் அலுவலரொருவர் 17ஆம் பிரிவின்கீழ் தராதர அங்கீகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஆளின் தொழிலிடத்தில் பதிவுசெய்யப்பட்ட இடத்தினுள் பிரவே சிக்கலாமென்பதுடன் —

(அ) தராதர அங்கீகாரத்திற்கான மூலப்பிரமாணம் திருப் திப்படுத்தப்பட்டுள்ளதா என ஆய்ந்தறியும் நோக்கத் திற்கு தேவையானவாறான அத்தகைய விசாரணை களையும், புலனாய்வுகளையும் செய்யலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் இந்தச் சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுடன் அல்லது 18 ஆம் பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் நியதிகளுடன் அவர் இணங்கியொழுகு கின்றாரா என ஆய்ந்தறிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தகவலை அல்லது விவரத்திரட்டைக் கொடுத்துதவுமாறு அவரைத் தேவைப்படுத்தலாம்.

*சட்டத்தால் சபைக்குக் குறித்தொதுக்கப் பட்ட ஏதேனும் பெயரின் பயன்பாட்டைத் தடைசெய்தல்.*

**35.** முப்பத்தாறாம் பிரிவின் (2)ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஆளெவரும், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரின்கீழ் அல்லது அப்பெயரின் முதலெழுத்துகளினாலான ஏதேனும் பெயரின்கீழ் ஏதேனும் செயற்பாட்டை, தொழிலை, வியா பாரத்தை அல்லது வாழ்க்கைத்தொழிலைக் கொண்டுநடாத்துத லாகாது.

ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபை அல்லது "தராதர அங்கீகாரம்" எனும் சொற்களின் பயன்பாட்டின் மீதான மட்டுப்பாடு.

**36.** (1) அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடனும் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமையவும் தவிர —

(அ) வியாபாரச்சின்னம், வடிவமைப்பு, வர்த்தக அடையாளம், தலைப்பு, சுட்டுத்துண்டு, அனுமதிச்சீட்டு, படவுருவம், பெயர், கையொப்பம், எழுத்து, "ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபை" எனும் சொல்லை எது கொண்டுள்ள இலக்க அல்லது அதன் ஏதேனும் ஒன்றிணைப்பு அல்லது சபையால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பெயர் அல்லது முதலெழுத்திலான சொல் எதுவும் 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச்சொத்துச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படு தலாகாது ;

(ஆ) ஆள் எவரும் 17 ஆம் பிரிவின்கீழ் தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றி, தராதர அங்கீகாரம் எனும் சொல்லைக் கொண்டிருக்கின்ற ஒரு சின்னத்தின்கீழ் அல்லது எந்த விவரணத்தில் அத்தகைய ஆள் 17ஆம் பிரிவின்கீழ் தராதர அங்கீகாரம் அளிக்கப்பெற்றுள்ளார் என்ற கருத்துப்பதிவை உருவாக்கக் கூடிய ஒருமுறையில் அச்சொல் பயன்படுத்தப்படுகின்றதோ அந்த விவரணத்தின்கீழ் ஏதேனும் வியாபாரப் பொருளை அல்லது உற்பத்திப்பொருளை விற்றலோ அல்லது ஏதேனும் சேவையை அல்லது வசதியை முனைவு செய்தலோ ஆகாது.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியன்று (35) ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் பெயரின்கீழ் ஏதேனும் செயற்பாட்டை, தொழிலை, வியாபாரத்தை அல்லது வாழ்க்கைத்தொழிலைக் கொண்டுநடாத்த அல்லது பதிவுசெய்த எவரேனும் ஆள் (35) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் விடயத்திற்கேற்ப அத்தகைய செயற்பாட்டை, தொழிலை, வர்த்தகத்தை அல்லது வாழ்க்கைத் தொழிலைத் தொடர்ந்து கொண்டுநடாத்தலாம் அல்லது பதிவுசெய்யப்பட்டிருக்கலாம்.

(3) முதலாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினதும் (ஆ) என்னும் பந்தியினதும் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வியாபாரச்சின்னத்தை அல்லது அத்தகைய ஏதேனும் வியாபாரச்சின்னத்தின்கீழ் ஏதேனும் வியாபாரப்பொருளின் அல்லது உற்பத்திப்பொருளின் விற்பனையைப் பாதித்தலாகாது.

(4) அமைச்சரானவர் அவரது அபிப்பிராயப்படி துஷ்பிர யோகத்தை தவிர்ப்பதற்கு அவ்வாறு செய்வது அவசியமானால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தை ஏதேனும் நேரத்தில் மீளப்பெறலாம்.

தவறுகள்.

**37.** (அ) பதினெட்டாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ;

(ஆ) முப்பதாம் பிரிவின் அல்லது 35 ஆம் பிரிவின் அல்லது 36 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடு களை மீறுகின்ற ;

(இ) பேரவையின் உறுப்பினர் ஒருவரை அல்லது சபையின் அலுவலர் ஒருவரை அல்லது இச்சட் டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் ஒரு வரை இச்சட்டத்தினால் அவருக்கு உரித்தாக்கப் பட்ட தத்துவங்களை அத்தகைய அலுவலர் அல் லது மதிப்பீட்டாளர் பிரயோகிக்கையில் அவரை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற ; அல்லது

(ஈ) முப்பத்திநான்காம் பிரிவின்கீழ் அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் வேண்டுமென்றே ஏதேனும் பொய்யான கூற்றைச் செய்கின்ற, அல்லது அதில் ஏதேனும் முக்கியமான விபரத்தை விட்டு விடுகின்ற,

எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும்.

தண்டங்கள்.

**38.** (1) வேறேதேனும் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எது எப்படியிருப்பினும், இந்தச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியான ஆள் ஒவ்வொருவரும் நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் —

(அ) முப்பத்தேழாம் பிரிவின் (அ) அல்லது (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தவறொன்றின் விடயத்தில், பத்தாயிரம் ரூபா வுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணமொன்றுக்கும் ; அத்துடன்

(ஆ) முப்பத்தேழாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தவறொன்றின் விடயத்தில், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கும்

ஆளாதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் 37 ஆம் பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படும்போதெல்லாம் நீதிமன்றமானது அத்தகைய தவறுக்காக அது விதிக்கக்கூடியதான வேறேதேனும் தண்டனைக்கு மேலதிகமாக, எந்த உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் தவறுபுரியப்பட்டதோ அந்த உற்பத்திப் பொருட்கள் எல்லாவற்றையும் அல்லது ஏதேனும் பாகத்தை அரசுக்கு இழப்பிக்கச் செய்யுமாறு அவ்வாறு கட்டளையிடப்பட்ட உற்பத்திப் பொருட்கள் நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்.

ஆட்கள் குழுக்கள் புரியப்பட்ட தவறுகள்.

**39.** இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழு ஒன்றினால் புரியப்படுகின்றவிடத்து -

(அ) அக்குழு கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாக இருந்தால், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவராக இருந்த ஒவ்வோர் ஆளும் ; அத்துடன்

(ஆ) அந்தக் குழு குழுமம் ஒன்றாக இருந்தால், அத் தவறுபுரியப்பட்ட நேரத்தில் அக் குழுமத்தில் பங்காளர் ஒருவராக இருந்த ஒவ்வோர் ஆளும் ;

அத்தவறு அவருடைய அறிவுக்கு எட்டாத விதத்திலேயே புரியப்பட்டது அல்லது அந்தத் தவறு புரியப்படுவதை தடுப்பதற்குத் தாம் எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என அவர் எண்பித்தாலன்றி, அவர் அத்தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**40.** (1) அமைச்சரானவர் எந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளுக்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் பேரவையின் சிபாரிசுகளுடன் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர், வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந்தன்மைக்குப் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) எத்திகதியில் ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்டதோ, அத்திகதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தராதர அங்கீகரிக்கப் பட்டு மீள மதிப்பீடு செய்யும்வரை வலிதானதாக இருக்கும்.

**41.** 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தால் ஆய்வுகூடங்களின் பரிசோதனைக்கான தராதர அங்கீகரிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் தராதர அங்கீகரிப்பானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தில் வலுவிலிருந்தனவும் இச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியொன்றுக்கு வலிதானதாகவும் பயனுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**42.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**43.** இந்தச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப் படுத்தினாலன்றி - பொருள் கோடல்.

"தராதர அங்கீகாரம்" என்பது ஒத்திசைவு மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆய்வுகூடமொன்று, சான்றளிப்பு அல்லது சோதனைக்குழு பயற்சி நிறுவனம் அல்லது ஆள், விடயத்திற்கேற்றவாறாக அத்தகைய ஆய்வுகூடம், சான்றளிப்பு அல்லது சோதனைக்குழு பயற்சி நிறுவனம் அல்லது ஆள் ஒருவர் தொடர்பில் வழங்கப்பட்ட சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட சோதனைகளையும், செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு தகுதிவாய்ந்தது என்று சபையால் அங்கீகரித்தல் எனப் பொருள்படும் ;

"தராதர அங்கீகாரச் சின்னம்" என்பது இந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட சின்னம் எனப் பொருள்படும் ;

"சான்றிதழ்" என்பது 18 ஆம் பிரிவின்கீழ் சபையால் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரச் சான்றிதழ் எனப் பொருள்படும் ;

"ஒத்திசைவு மதிப்பீடு" என்பது ஏதேனும் படிமுறை, முறைமை, வியாபாரப்பொருள், உற்பத்திப்பொருள் அல்லது சேவை, அதன்கீழ் அத்தகைய படிமுறை முறைமை, வியாபாரப்பொருள், உற்பத்திப்பொருள் அல்லது சேவை தொடர்பில் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கும், வேறு தொழில்நுட்பத் தேவைப்பாடுகளுக்கும் (உற்பத்தி, தயாரிப்பு படிமுறைப்படுத்தல் அல்லது பதப்படுத்தல் தொடர்பிலான தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக) என்று நேரடியாக அல்லது மறைமுகமாக தீர்மானம் செய்தல் எனப் பொருள்படும் ;

"உள்ளூரதிகார சபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய மாநகர, நகர சபையால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட, நிறை

வேற்றப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களை, கடமைகளை, பணிகளைப் பிரயோகிப்ப தற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

“ஆள்” என்பது ஆட்களின் குழு ஒன்றையும் உள்ளடக்கும் ;

“விதித்துரைக்கப்பட்ட” என்பது இந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்ட ஒழுங்குவிதிகளினால் விதந்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும் ;

“மாகாண சபை” என்பது அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட மாகாண சபை ஒன்று எனப் பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*